D.O. 815/2016
C.No. A9/807/2011

District Police Office,
Dindigul District,
Dindigul.
Dated: 06.09.2016

**REGULARIZING THE SERVICE OF TMT.M.CHITRA DEVI, TYPIST IN DINDIGUL DISTRICT – ORDERS ISSUED.**

In accordance with the Orders issued by the Government order in G.O.Ms. No. 553 Home (Pol.15) Department, dated: 21.06.2016 communicated in chief Office Memorandum in C.No. 105479/CA R(1)/2016, dated: 09.07.2016 the service of Tmt. ChitraDevi, D/O R.Maruthamuthu (late PC 662/Trichy) who was appointed as Typist on Compassionate Grounds in Railway Police Office, Trichy on 27.09.2007 and subsequently transferred to Dindigul District was regularized in the post of Typist w.e.f. 05.10.2007 AN.

**Sd/-A.Saravanan,**
Superintendent of Police,
Dindigul District,Dindigul.

The Individual,

Copy to the Director General of Police, Tamil Nadu, Chennai-4.
Copy to the Inspector General of Police, South Zone, Madurai.
Copy to the Deputy Inspector General of Police, Dindigul Range, Dindigul.
Copy to the Additional Supdt.of Police, Head Quarters, DindigulDistrict.
Copy to the All Administrative Officers in District Police Office, Dindigul
Copy to the All Superintendents in District Police Office, Dindigul District
Copy to Concern Assistants in DPO for necessary action.
Copy to the C.A to Superintendent of Police, Dindigul District.
Copy to D.O Book and SF.

//t.c.f.b.o//

For Superintendent of Police,
Dindigul District,Dindigul

Scanned with CamScanner

01 AUG
திண்டுக்கல் மாவட்டம்

vide A9/807/20

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி - காவல் துறை - செல்வி M. சித்ராதேவி (த/பெ. R. மருதமுத்து, மறைந்த காவலர் 662) என்பவர் காவல் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிகமாக தட்டச்சராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிகள் வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

உள் (காவல். 15) துறை

அரசாணை (டி) எண்.553

நாள் 21.06.2016
துன்முகி – ஆனி 7
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது:-

1. காவல் துறை தலைமை இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற கடித ந.க.எண்.000371/சிஎஆர்1/2009, நாள் 12.08.2011, 03.04.2013, மற்றும் 17.10.2013.
2. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து வரப்பெற்ற கடித எண்.2383/சிடிபி.1/2016, நாள் 06.04.2016.

*******

ஆணை:-

திரு. R. மருதமுத்து என்பவர் திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்துகொண்டிருந்தபோது 30.09.1985 அன்று மரணமடைந்தார். அவரது குடும்பத்தில் பொருளீட்டும் நபர் யாருமில்லாததால், அவருடைய குடும்பம் வறுமையான சூழ்நிலையில் இருந்து வந்தது. எனவே, அவருடைய மகள் செல்வி M. சித்ராதேவி என்பவர் தனக்குக் காவல் துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யும்படி 15.09.1997 தேதியிட்ட மனுவில் விண்ணப்பித்திருந்தார். செல்வி M. சித்ராதேவி என்பவரது பிறந்த தேதி 10.06.1978 ஆகும். தனியர் இடைநிலைக் கல்வியில் பள்ளியிறுதி வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே, செல்வி M. சித்ராதேவி என்பவரின் விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து, 05.10.2007 பிற்பகல் முதல் காவல் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிகமாக திருச்சி இருப்புபாதை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்டார்.

2. அவ்வாறு தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி M. சித்ராதேவி என்பவருடைய பணியினை அவர் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 05.10.2007 பிற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கு, காவல் துறை தலைமை இயக்குநர் மேலே, முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். ஆனால், தனியர் செல்வி M. சித்ராதேவி கருணை அடிப்படையில் பணிநியமனம்கோரி விண்ணப்பம் அளித்த நாளுக்குப் (15.09.1997) பின்னர் பெறப்பட்ட தொழில்நுட்ப கல்வித்தகுதியின் அடிப்படையில் (ஆங்கிலம் தட்டச்சு உயர்நிலை பிப்ரவரி 2000 (ம) தமிழ் தட்டச்சு உயர்நிலை ஆகஸ்ட் 2000–ம் ஆண்டு) தட்டச்சராக 05.10.2007 பிற்பகல் முதல் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். இப்பணிநியமனம் அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 03.08.1977–ன் பத்தி 6க்கு முரணான

Scanned with CamScanner

நியமனம் ஆகும். எனவே, மேற்கூறிய அரசாணைக்கு விலக்களித்து தனியரின் தட்டச்சர் பணியினை 05.10.2007 பிற்பகல் முதல் வரன்முறைப்படுத்தலாம் என அரசால் முடிவு செய்யப்பட்டு, தனியரின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு இசைவளிக்குமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. 1954-ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை 16(பி)-ன் பிற்பகுதியில் கண்டுள்ளதற்கிணங்க செல்வி M. சித்ராதேவி என்பவரை காவல் துறையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் 05.10.2007 பிற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் அவரது பணியினை வரன் முறைப்படுத்துவதற்கு, மேலே படிக்கப்பட்ட கடிதம் இரண்டில் தேர்வாணையம் தனது இசைவினைத் தெரிவித்துள்ளது.

3. திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 05.10.2007 பிற்பகல் முதல் கருணை அடிப்படையில் தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்டு தற்போது பணியிடமாறுதலில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பணிபுரியும் செல்வி M. சித்ராதேவி (த/பெ. R. மருதமுத்து, மறைந்த காவலர் 662) என்பவர் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவருடைய பணியினை தட்டச்சர் பதவியில் 05.10.2007 பிற்பகல் முதற்கொண்டு வரன்முறைப்படுத்த வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மா. செந்தாமரை,
அரசு கூடுதல் செயலாளர்.

<u>பெறுநர்</u>

காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை – 4.
மாநில கணக்காயர், சென்னை– 18.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
காவல் கண்காணிப்பாளர், திண்டுக்கல் மாவட்டம்.

<u>நகல்:-</u>

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–32.
செல்வி M. சித்ராதேவி (த/பெ. R. மருதமுத்து, மறைந்த காவலர் 662)
காவல் கண்காணிப்பாளர், திண்டுக்கல் மாவட்டம்
(காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம், வழியாக)
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாக சீர்த்திருத்தத் துறை, சென்னை–9.
உள் (காவல்–5) துறை, சென்னை–9.
*உதிரிகள்.2*

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner